இன்றைய செய்தி நாளைய வரலாறு



கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

www.murasoli.in | நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி | murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 83 – ஒலி : 152 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – மார்கழி 26 – வெள்ளிக்கிழமை 10 ஜனவரி 2025 – மதுரை 12 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 83 - Issue 152 : Thiruvalluvar Year - 2055 - Margazhi 26 - Friday 10 January 2025 - Madurai 12 Pages ₹ 5.00


### துணை வேந்தர்கள் நியமனங்களில் ஆளுநர்களுக்கு அதிக அதிகாரம் அளிக்கும்

# யு.ஜி.சி. நடவடிக்கை கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது!

## சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் – யு.ஜி.சி.யின் புதிய விதிகளை திரும்பப்பெற தனித் தீர்மானம் கொண்டுவந்து வலியுறுத்தல்!

## முதல்வர் கொண்டுவந்த தனித் தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேறியது!

**சென்னை, ஜன. 10 -**

**துணை வேந்தர்கள் நியமனங்களில் ஆளுநர்களுக்கு அதிக அதிகாரம் அளிக்கும் யு.ஜி.சி. நடவடிக்கை கூட்டாட்சித் தத்துவத்திற்கு எதிரானது என சட்டப்பேரவையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் யு.ஜி.சி.யின் புதிய விதிகளை திரும்பப்பெற தனித் தீர்மானம் கொண்டுவந்து வலியுறுத்தினார்.**

**முதல்வர் கொண்டுவந்த இத்தனித் தீர்மானம் அனைத்துக் கட்சிகளின் ஆதரவுடன் ஒருமனதாக நிறைவேறியது!**

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில், பல்கலைக்கழகங்களில் துணை வேந்தர்களை நியமிப்பது தொடர்பாக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்தி முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து ஆற்றிய உரை வருமாறு :-

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

**"வறியவர்க்கெல்லாம் கல்வியின் வாடை**
**வரவிடவில்லை மதக்குருக்களின் மேடை**
(மேசையைத் தட்டும் ஒலி)
**நறுக்கத் தொலைந்தது அந்தப் பீடை**
**நாடெல்லாம் பாய்ந்தது கல்வி நீரோடை!"**
(மேசையைத் தட்டும் ஒலி)

என்று பாடினார் பாவேந்தர் பாரதிதாசன்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சட்டமன்றப் பேரவையில், பல்கலைக்கழகங்களில் துணைவேந்தர்களை நியமிப்பது தொடர்பாக பல்கலைக்கழக நிதிநல்கைக் குழு வெளியிட்ட வரைவு நெறிமுறைகளைத் திரும்பப் பெற வேண்டுமென ஒன்றிய அரசை வலியுறுத்தி அரசினர் தனித் தீர்மானத்தை முன்மொழிந்து உரையாற்றினார்.

அந்தக் கல்வி நீரோடையை மீண்டும் தடுக்க எல்லா வகையிலும் முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

**கல்வி மூலம் நாம் முன்னேறுவதை தொடர்ந்து தடுக்கப் பார்க்கிறார்கள்!**

எல்லோரும் படித்து, எல்லோரும் வேலைக்குப் போய், எல்லோரும் தலைநிமிர்வது பிடிக்காதவர்களால் தொடர்ச்சியாக கல்வித் துறையில் தடுப்பணைகள் கட்டப்படுகின்றன. பள்ளிக் கல்வியைச் சிதைப்பதற்காகவே புதிய தேசிய கல்விக் கொள்கையைக் கொண்டு வந்து திணிக்கிறார்கள். அரசுப் பொதுத் தேர்வு என்ற பெயரால் வடிகட்டி, வடிகட்டி அனைவரையும் கல்வியைத் தொடர முடியாமல் செய்யப் போகிறார்கள். அதனைத் தமிழ்நாடு அரசு கடுமையாக எதிர்த்துக் கொண்டிருக்கிறது.

**பல்கலைக் கழகங்களையும் சிதைக்கும் முயற்சியை எடுக்கிறார்கள்!**

நீட் தேர்வு மூலமாக மருத்துவக் கனவைச் சிதைக்கும் காரியத்தை பல ஆண்டுகளாகச் செய்து வருகிறார்கள். தங்கை அனிதா உள்ளிட்ட எத்தனையோ உயிர்களை நாம் இழந்தோம். ஆனால், ஆண்டுதோறும் ஆள்மாறாட்டம், வினாத்தாள் லீக், மதிப்பெண் குளறுபடி என்று எல்லா முறைகேடும் நடப்பதில் நம்பர் ஒன் தேர்வாக நீட் தேர்வு இருக்கிறது.

இதேபோல பல்கலைக்கழகங்களையும் சிதைக்கும் முயற்சியை ஒன்றிய அரசு தொடங்கி விட்டது. துணைவேந்தரை தேர்வு செய்ய அமைக்கப்படும் தேர்வுக் குழுவை ஆளுநரே தீர்மானிப்பார் என்று யு.ஜி.சி. எனப்படும் பல்கலைக்கழக மானியக் குழு விதிமுறை வகுத்துள்ளது. துணைவேந்தர்களை நியமிக்கும் அதிகாரத்தை ஆளுநர் கையில் கொடுப்பது, பல்கலைக்கழகங்களைச் சிதைக்கும் காரியமாகத்தான் முடியும். அதற்காகத்தான் இப்படிச் செய்யப் போகிறார்கள். இந்த விவகாரத்தில் ஏற்கனவே தமிழ்நாடு அரசுக்கும், ஆளுநருக்கும் கருத்து மோதல் தொடர்ந்து நடந்து வருகிறது.

துணைவேந்தரைத் தேர்ந்தெடுக்கும் தேர்வுக் குழுவில் யு.ஜி.சி. பரிந்துரை செய்யும் உறுப்பினர்களை ஆளுநர் நியமித்தார். நாம் அதனை ஏற்கவில்லை. இந்த மோதலுக்கு ஆக்கபூர்வமான தீர்வு எட்டப்படாத நிலையில், தன்னிச்சையாக துணைவேந்தர்களை நியமிக்கும் அதிக அதிகாரங்களை ஆளுநர்களுக்கு வழங்குவது சரியுமல்ல; முறையுமல்ல. இவர்களாக ஒரு உத்தரவைப் போட்டுவிட்டு, இதனை அமல்படுத்தாத கல்வி நிறுவனங்கள் யு.ஜி.சி. திட்டங்களில் பங்கேற்க முடியாது என்று சொல்வது அநியாயம் அல்லவா? அதுவும், பட்டங்களை வழங்க முடியாது என்பது பகிரங்கமான மிரட்டல் அல்லவா? வேறு எதை அது எடுத்துக்காட்டுகிறது?

**மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசை சிறுமைப்படுத்தும் செயல்!**

மாநில அரசுகள் தங்கள் வளத்தில், பொருளாதார பலத்தில் கட்டிய பல்கலைக் கழகங்களை அபகரித்துக் கொள்கிற அக்கிரமமான முயற்சியாகவே இதனைக் கருத வேண்டி இருக்கிறது. இந்த விதிமுறை கூட்டாட்சித் தத்துவத்துக்கு எதிரானது; மாநில உரிமைகளில் தலையிடுவது மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மாநில அரசுகளைச் சிறுமைப்படுத்தும் செயல்! மக்களால்


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்


### புத்தாக்கம் – தொழில்நுட்ப வளர்ச்சியில் முதலிடம் வகிக்கிறோம்! புதுமை மற்றும் மேன்மையின்

# உலகளாவிய மையமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம்!

## தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அழைப்பு!

**சென்னை, ஜன. 10 -**

**புத்தாக்கம் - தொழில்நுட்ப வளர்ச்சியில் முதலிடம் வகிக்கிறோம் எனவும், புதுமை மற்றும் மேன்மையின் உலகளாவிய மையமாக தமிழ்நாட்டை உருவாக்குவோம் எனவும், தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டைத் தொடங்கி வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உறுதிபடக் கூறினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில், Umagine TN 2025 தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை தொடங்கி வைத்து ஆற்றிய உரை வருமாறு:-

'Umagine TN 2025' மூன்றாவது முன்னணித் தகவல் தொழில்நுட்ப உச்சிமாநாட்டில் கலந்து கொண்டு பேசுவதில் நான் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன்.

இந்த மாநாட்டின் சிறப்பம்சம் என்பது, இது தொழில்துறை சார்ந்த கல்வியாளர்கள், தொடக்க நிறுவனங்கள், முதலீட்டாளர்கள் மற்றும் உலகளாவிய தலைவர்களை ஒரு கூரையின்கீழ் ஒருங்கிணைக்கவும், ஒன்றிணைக்கவும் துடிப்பான தளமாக செயல்பட்டு வருவதுதான், AI தான் இன்றைக்கு எல்லா இடங்களிலும் பேசப்படுகின்ற 'Next Big Thing'!

அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் அவர்களே பலமுறை சொல்லியிருக்கிறார்,

**மாநாட்டை ஒருங்கிணைத்துள்ள அமைச்சர் பழனிவேல் தியாகராஜனுக்கு பாராட்டுகள்!**

"AI, Machine Learning இதனால் எல்லாம் வேலைவாய்ப்புகள் குறையாது. மேலும், வேலைவாய்ப்புகள் பெருகத்தான் செய்யும்" என்று தெளிவாக பேசியிருக்கிறார். அந்த வகையில், சரியான திசையை நோக்கி, இந்த மாநாட்டை ஒருங்கிணைத்திருக்கும் அவருக்கு என்னுடைய பாராட்டுக்களையும், வாழ்த்துகளையும் நான் தெரிவித்துக் கொள்கிறேன்.


தொடர்ச்சி 3-ஆம் பக்கம்





முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (9.1.2025) சென்னை, நந்தம்பாக்கம், சென்னை வர்த்தக மையத்தில் தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை சார்பில் இரண்டு நாட்கள் நடத்தப்படும் "Umagine TN" தகவல் தொழில்நுட்ப உச்சி மாநாட்டை தொடங்கி வைத்து விழாப் பேருரையாற்றினார். இந்நிகழ்ச்சியில், தகவல் தொடர்பு மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன், தகவல் தொழில்நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் குமார் ஜெயந்த், மின்னாளுமை இயக்குனர் மற்றும் தமிழ்நாடு மின்னாளுமை முகமை தலைமை நிர்வாக அலுவலர் எம். கோவிந்த ராவ், தமிழ்நாடு மின்னணு நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) திருமதி பி. ரமண சரஸ்வதி, தமிழ்நாடு அரசு கேபிள் டிவி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் (பொறுப்பு) மரு. இரா. வைத்திநாதன், இந்திய தொழில் கூட்டமைப்பின் தென் மண்டல தலைவர் திருமதி நந்தினி, HCL Tech நிறுவன முதன்மை செயல் அலுவலர் விஜயகுமார், HP இந்தியா நிறுவனத் துணைத் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திருமதி இப்ஸிதா தாஸ் குப்தா, இந்திய மென் பொருள் தொழில்நுட்ப பூங்கா இயக்குநர் அரவிந்த குமார், பல்வேறு நாடுகளின் தூதரக அலுவலர்கள் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.